Registered as a Newspaper in Sri Lanka    விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2  1-7-1985 திங்கட்கிழமை (ஆனி 17 ஷவ்வால் 12) முழக்கம் 146

## ஊரடங்குச் சட்டம் நேற்று முதல் 9 மணியிலிருந்து அமுல்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களின் ஊரடங்குச் சட்ட நேரத்தை மேலும் தளர்த்த அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது. இரவு ஒன்பது மணியில் இருந்து அதிகாலை நான்கு மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்படுகிறது. வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து இரவு பத்து மணி முதல் அதிகாலை நான்கு மணிவரை ஊரடங்கு அமுலில் இருக்கும்.

# 39 அமெரிக்க பணயக் கைதிகளும் விடுதலை
# லெபனுன் கைதிகள் விடுதலை பற்றி முடிவு இல்லை

கடந்த மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அமெரிக்க விமானத்துடன் கடத்தப்பட்டு தற்போது பெய்ருட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முப்பத்தொன்பது அமெரிக்க பயணிகளும் நேற்று விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது இத்தகவலை சியாமுஸ்லீம் இயக்கத் தலைவர் நபி பெரி வெளியிட்டார்.

இந்த அமெரிக்கர்கள் தற்போது டமாஸ்கஸ் புறப்பட்டு அங்கிருந்து மேற்கு ஜெர்மனிக்குச் செல்வார்கள்.

இஸ்ரேலில் காவலில் உள்ள எழுநூற்று முப்பத்தைந்து லெபனுன் கைதிகளை விடும்படி கோரி இந்தக் கடத்தல் விவகாரம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஆனுல் இவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்பது பற்றிய எந்த விபரமும் வெளியிடப்படவில்லை. கடந்த பதினைந்து நாட்களாக அமெரிக்க பயணிகள் விமானத்துடன் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

★ இரு தரப்பினரும் ஒன்ருகச் சந்திக்கும் பூட்டான்

# மாநாடு 10-ம் திகதியே ஆரம்பம்
# இளைஞர்கள் டில்லிக்கு அழைப்பு

## பாரத அதிகாரிகளைச் சந்திக்க இலங்கை குழுவினரும் 7ம் திகதி டில்லி செல்லலாம்

(சென்னை)

இலங்கை அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளது வேண்டுகோளுக்கிணங்க பூட்டானில் இம்மாதம் எட்டாம் திகதி ஆரம்பமாகவிருந்த இரு தரப்பினரதும் முக்கிய மாநாடு இரு தினங்களுக்குப் பின் போடப்பட்டுள்ளதாகவும், பத்தாம் திகதி புதன்கிழமையே இச்சந்திப்பு மாநாடு நடைபெறுமெனவும் சென்னையிலிருந்து வெளியான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் தூதுக்குழுவினர் திரு எச். டபிள்யூ ஜெயவர்த்தன கியூ. ஸி தலைமையில் பூட்டானுக்குச் செல்லும் வழியில் இரு தினங்கள் புதுடில்லியில் தரித்து நின்று பாரத அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தலாமெனவும் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது இனப்பிரச்சினை சம்பந்தமாக புதிதாக எழும்பியுள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்காகவே அவர்கள் இந்திய அதிகாரிகளைச் சந்திக்கவிருப்பதாகக் கூறப்படுகிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கைப் பாதுகாப்புப்படையினர் மீறி விட்டதாக நான்கு

—4ஆம் பக்கம் பார்க்க

## தலைகீழாகக் கட்டப்பட்ட நெல்லியடி மரணதண்டனை

(உடுப்பிட்டி)

நெல்லியடி மகாத்மா தியேட்டருக்கு அருகில் உள்ள கம்பத்தில் தலைகீழாக தொங்க இணைக்கப்பட்டு முதியவர் ஒருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கம் இத் தண்டனையை வழங்கியதாக இவருடன் இணைக்கப்பட்ட அட்டையில் எழுதப்பட்டிருந்தது.

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக புத்து

—4ம் பக்கம் பார்க்க

## ஆனந்தராஜனின் இறுதிச் சடங்கு இன்று காலை

சென் ஜோன்ஸ் அதிபர் ஆனந்தராஜனின் இறுதிச் சடங்குகள் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும்.

நேற்று பிற்பகல் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தபோதிலும், அன்னுரின் மூத்த மகள் கனடாவிலிருந்து நேற்று இரவு வந்ததால் கடைசி நேரத்தில் இறுதிச் சடங்கு நேரம் மாற்றம் செய்யப்பட்டது

கல்லூரி பீற்றோ மண்டபத்திலிருந்து பூதவுடல் இன்று ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு சென் ஜோன்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

## சுவரொட்டி

(வண்ணூர்பண்ணை)

யாழ்நகர் எங்கும் ஒட்டப்பட்டிருக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகளில் ''கசிப்பு உயிர்க்கொல்லி; இதன் ஆக்கிரமிப்பை ஒன்று திரண்டு எதிர்ப்போம்; கசிப்பு ஒரு நச்சு; எம்மினத்தை நாமே அழிப்பதா'' என்று எழுதப்பட்டிருந்தது.

அமைச்சர் அத்துலத் முதலி கூறுகிருர் :

## வன்முறைகள் குறைந்துள்ளதால் பேச்சுவார்த்தை சாதகமாகும்

(காலி)

''பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் புதிய சகாப்தம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. வன்முறைச் சம்பவங்கள் குறைந்து வருகின்றன. பேச்சுவார்த்தைகளை விரும்பாதவர்கள் இப்போது அதற்குத் தயாராக இருக்கின்றுர்கள். இது முழு மக்களுக்கும் ஒரு வெற்றியாகும்.''

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி காலியில் நடைபெற்ற சமய நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினுர்.

பாதுகாப்பு ஊழியர்களின் சேவையைப் பாராட்டிப் பேசிய அமைச்சர் ''பேச்சு

—4ம் பக்கம் பார்க்க

## இந்தியாவுக்கு 40 மிராஜ் ஜெட்

இந்தியா பிரான்சிடம் இருந்து நார்பது மிராஜ் ஜெட் விமானங்களை வாங்கியுள்ளது. இவற்றில் ஏழு

— 4ஆம் பக்கம் பார்க்க

துணைவேந்தர் வித்தியானந்தன் இரங்கலுரை:

## இக்கட்டான காலத்திலும் கல்வித் தொண்டு புரிந்தவர் ஆனந்தராஜன்

திரு ஆனந்தராஜன் சென். ஜோன்ஸ் கல்லூரியின் அதிபராகவிருந்த காலம் தமிழருக்கு இக்கட்டான ஒரு காலமாகும். மக்கள் பெரும சோதனைகளையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டிருந்த போதிலும் தமது கல்லூரியை சரியாக வழி நடத்தி, பல்கலைக்கழகங்களில் சென் ஜோனின் பெயரைத் துலங்கச் செய்தார்.

மேற்கண்டவாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தெரிவித்தார்.

சென். ஜோன்ஸ் பீற்றோ மண்டபத்தில நேற்று மாலை ஆனந்தராஜன் மரணம் தொடர்பான இரங்கலுரைகள் இடம்பெற்றன. வண. ஜெ. சர்வானந்தா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில்

—4ஆம் பக்கம் பார்க்க

## ராஜாங்க அமைச்சு தெரிவிக்கும் மன்னுர், யாழ்ப்பாணம், மட்டுநகர் வன்செயல்கள்

வடபகுதி தீவிரவாதிகள் வன்செயல்களில் ஈடுபடப்போவதில்லை என்ற இணக்கத்தை மீறி தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபடுவதாக ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு: வட பகுதியில் இரு கடத்தல் சம்பவங்களுடன் பல கொலைச் சம்பவங்களிலும் தீவிரவாதிகள் ஈடுபட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. இச்சம்பவங்களில் பதினுன்கு பேர் மரணமானதாகவும், நான்கு பேர் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் மன்னுருக்கு அருகில் உள்ள கொடியன்குளம் என்ற காட்டுப் பகுதியில் சூட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறு வவுனியாவில் உள்ள பன்றிமடு என்ற

—4ஆம் பக்கம் பார்க்க

## பலோ ஜனுதிபதி படுகொலை

(லண்டன்)

மேற்குப் பசுபிக்கில் உள்ள சிறிய குடியரசுநாடான பலோவின் ஜனுதிபதி ரெமலிக் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பலோவின் தலைநகரான கொரோரில் உள்ள அவரின் வாசஸ்தலத்துக்கு வெளியே வைத்து அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

## 'பாடசாலை அபிவிருத்திக்கு

# பொருளின்றேல்சிரமதானம் மூலமாவது உதவவேண்டும்''

(இருபாலை)

''எந்தப் பாடசாலையாயினும் இன்றைய நிலையில் தமது தேவைக்கென அரசாங்கத்தை நம்பிக் காத்திருக்க முடியாது; எமது பிள்ளைகளின் கல்வித் தேவையை முன்னிட்டு எம்மால் செய்யக்கூடியனவற்றை செய்துதவ வேண்டும். எமது பாடசாலையில் இதுவரை காலமும் ஐந்தாம் வகுப்புவரை மட்டுமேநடாத்தக்கூடியதாகஇருந்தது. ஆனால் நாம் எடுத்துக் கொண்ட விடாமுயற்சியினாலும், கல்விப் பணிப்பாளர், கல்வியதிகாரி ஆகியோரின் மனந்தளரா சேவையினாலும் வருகிற ஆண்டு தொடக்கம் எட்டாம் வகுப்புவரை நடாத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.''

இவ்வாறு கோப்பாய்தெற்கு இருபாலை கந்தவேள் வித்தியாசாலையில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்த அதிபர் திரு. செ. குணசிங்கம் உரையாற்றுகையில் கூறினார்.

கடந்த ஆவணியில் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியையின் இடத்திற்கு இதுவரை எவரும் நியமிக்காதது குறித்தும் அவர் மனவேதனைப்பட்டார். பத்து ஆசிரியர்கள் இருக்க வேண்டிய எமது பாடசாலையில் நான்கு ஆசிரியர்களே தற்போது உள்ளனரென்றும் அவர் விசனப்பட்டார்.

பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு. க. மார்க்கண்டு உரையாற்றுகையில்: ஒவ்வொரு பெற்றோரும் பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொள்ள வேண்டும். பொருள் – பணம் கொடுக்க வசதியற்றோர் சிரமதானம் மூலமாகவேனும் தங்கள் பங்களிப்பினைச் செய்ய வேண்டும் என்றார்.

நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. செ. குணசிங்கம் (அதிபர்) உப-தலைவர்களாக ரி. ஆர். செல்வரத்தினம், எஸ். முருகையா, காரியதரிசியாக திரு. க. மார்க்கண்டு (முன்னாள் வித்தியசாலய அதிபர்) தனாதிகாரியாக திருமதி மா. பாலசுப்பிரமணியம் ஆகியோருடன் எட்டுப் பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## நினைவஞ்சலி

### அமரர் வ. கந்தையா

அற்றம் மறைக்கும்பெருமை வாய்ந்தவர்கள் என்ற வள்ளுவர் கூற்றுக்கமைய வாழ்ந்தவர்களில் ஒருவரான கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலய முன்னாள் அதிபரான திரு. வ. கந்தையா அமரராகிவிட்டார். இவ்வித்தியாலயத்தை ஸ்தாபித்து 25 வருட காலம் அதிபராகவிருந்து தனது அயராத முயற்சியின் பயனாக மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தினார். பொது ஸ்தாபனங்கள் பலவற்றிலும் முக்கிய பங்கு கொண்டுழைத்த அமரர் சிறந்தகூட்டுறவாளருமாவார்.

காலத்திற்கேற்ப வாழ்ந்து காட்டிய அவர் மறைந்துவிட்டாலும் அவரின் பணிகள் இறவாவரம் பெற்றவையாக என்றும் நிலைத்திருக்கும்.

—ச. திருச்சிற்றம்பலம்




❋ கிளிநொச்சி கணேசபுரம் அமிர்தலிங்கம் – செல்லம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வன் அனேஷன் 1வது பிறந்தநாளை இன்று கொண்டாடுகிறார்.

❋ மிருசுவில் குணநாதன்– இரத்தினஜோதி தம்பதிகளின் மகள் சுஜானி முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❋ புங்குடுதீவு 12ம் வட்டாரம் முருகராசா – சந்திராதேவி தம்பதிகளின் மகன் சுஜீவன் இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ பாஷையூர் இரண்டாம் குறுக்குத் தெரு, தேவதாஸ்- திரேசம்மா தம்பதிகளின்மகள் ஆன் மேரி நியூலர எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

❋ மாங்குளம், அரவிந் கிளினிக் மகாலிங்கம் லலிதா தம்பதிகளின் மகள் சுலிலா இன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ மாங்குளம், அரவிந் கிளினிக் மகாலிங்கம் லலிதா தம்பதிகளின் மகன் தீபன் பதினோராவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ மிருசுவில் படித்த மகளிர் திட்டம், நவரத்தினம் மனோன்மணிதம்பதியின் மகள் அநுசாதா இன்று தனது 2வது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## திருட்டுகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி களவாடப்பட்டுள்ளது.

இதேவேளையில் புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முதலாம்இலக்கக் கிளை நிலையத்திலும் அண்மையில் களவு நடைபெற்றுள்ளது. இந்நிலையத்திலிருந்து பொருட்கள் யாவும் இரவோடிரவாகச் சூறையாடப்பட்டுள்ளன.

## வேலணை கருத்தரங்கில் பேச்சு

# இலட்சியங்கள் ஈடேற இலக்கியம் உதவ வேண்டும்

(வேலணை)

''இலக்கியங்கள் மனிதனுடைய வாழ்க்கைக் கோலங்களைப் பிரதிபலிப்பது மட்டுமன்றி இலட்சியப் போக்குடையதாகவும் அமைதல் வேண்டும். அப்போதே அவை பயனுள்ளதாய் விளங்க முடியும்'

இவ்வாறு வேலணை கலை இலக்கிய வட்டத்தால் ஒழுங்கு செய்த 'இன்றைய நிலையில் இலக்கியப் போக்கு' என்னும் கருத்தரங்கில் உரையாற்றிய பிரபல எழுத்தாளர் திரு. ஆ. சபாரத்தினம் குறிப்பிட்டார்.

வேலணை கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் திரு. க. சோதிராசன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. சபாரத்தினம் தொடர்ந்து பேசுகையில், 'பழைய இலக்கியங்கள் யாவற்றையும் பயனற்றன என்று ஒதுக்கிவிடாது பழைமையிலும் நாம் புதுமையைக் காண முயற்சி செய்தல் வேண்டும்' என்றார்.

இக்கருத்தரங்கில் ஆசிரியர் திரு. தவபாலன் பேசுகையில், ''இலக்கியங்கள் ஒரு பக்கச் சார்பின்றி மனிதனுடைய உள்ள உணர்வுகளைப் பிரதிபலிக்க வேண்டும். அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காக இலக்கியங்கள் எழுச்சிக் குரல் கொடுக்க வேண்டும்'' என்றார்.

வேலணை கிழக்கு மாதர் சங்கத் தலைவி திருமதி தி. பத்மாவதி, சமாதான நீதவான் திரு. ஐ. கந்தையா, திரு. சிவகுருநாதன், செல்வி பொன். இராஜேஸ்வரி உட்பட பலர் கருத்துரை வழங்கினர்.


வரி விளம்பரம்

விற்பனைக்கு

நாவலர் வீதியில் 1 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. காரியாலயத்திற்கும் பாவிக்கலாம், 166/2 (126), நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

For RADIO REPAIRS

No. 476, Main Street, CHUNDIKULI


## ஜூலை 2, 3ல் பென்ஷன்

பென்ஷன்பணம் மீண்டும் இம் மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் துரையப்பா ஸ்ரேடியத்தில் வழங்கப்படும்.

அவற்றின் விபரங்கள் வருமாறு: ஜூலை 2 ஆம் திகதி யாழ்ப்பாணம், சுன்னாகம், உரும்பராய். ஜூலை 3 ஆம் திகதி - யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை, வண்ணார்பண்ணை, அளவெட்டி.

## விநாயகர் உற்சவம்

(புலோலி)

கிழவிதோட்டம் விநாயகராலய வருடாந்த மகோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

## சரசாலையில் கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சரசாலை இலந்தைத் திடல் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் மகாகும்பாபிஷேகம் அடுத்த மாதம் நான்காம் திகதி ஆலய குருக்கள் பிரதிஷ்டாகுரு ''வேதாகம சோதிட பூஷணம்'' சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

சென்றமாதம் முப்பதாம்திகதி இதன் கிரியைகள் ஆரம்பமாகின தொடர்ந்து நான்காம் திகதிவரை நடைபெறும்.

இக் கும்பாபிஷேக நாட்களில், நல்லை ஞானசம்பந்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், துர்க்கா துரந்தரி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் செ. சிவலிங்கம் ஆகியோரின் அருளுரைகளும் இடம்பெறும்.


டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்

வெற்றிடங்கள்

கீழ்க்காணும் வேலைகளில் சேர விரும்புபவர்கள் ஜூலை 2, 3, 4ம் தேதிகளில் மு.ப. 10.30 மணிக்கும் பி.ப 2மணிக்குமிடையில் நேரில் வருமாறு கேட்கப்படுகின்றனர். (வரமுடியாதோர் எழுத்தில் விண்ணப்பிக்கலாம்.)

பொருத்துனர் (Fitters), ஒட்டுனர் (Welders), கொல்லர் (Blacksmiths), தகரவேலையாளர் (Sheet-metal workers)

உதவியாளர்களாகச் சேர விரும்புவோர் நேரில் வராது, எழுத்து மூலமாக விண்ணப்பம் அனுப்பவும்.

476, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தரமான தங்க நகைகளை

உங்கள் விருப்பம் போல்

தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்

★ நித்யா ★

கோல்ட் ஹவுஸ்

NITHYA GOLD HOUSE

303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

குறிப்பு: தரமான பழைய நகைகளை கூடிய விலைக்கு கொள்முதல் செய்யப்படும்


## நன்றி நவிலல்

வே. திருஞானேந்திரன்–பெனி கமலாதேவி ஆகியோரின் ஒரே அன்பு மகளும் எங்கள் பேத்தியுமாகிய ''யோஆன்கமலினி'' லண்டனில் அகால மரணமெய்தியதை அறிந்து நேரேவந்து எங்களுக்கு ஆறுதல் பல இயம்பி எம்மை ஆற்றிச்சென்ற, எம்மினத்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சொர்ணமலர் மன்றம்,
உசன்,
மிருசுவில்.

வித்வான்
க. ம. யோசேப்பு
மனைவி அன்னமேரி
சொர்ணம்

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### S. A. சந்தியாகோ J. P.

இளைப்பாறிய சிறைச்சாலை அதிகாரி, முகாமையாளர் A. F. றேமன்ட்ஸ் அந்தியகால சேவை, யாழ்ப்பாணம்



தோற்றம்: 26-5-1920 மறைவு: 02-06-1985

அன்பின் திருவுருவமாய் பண்பின் சிகரமாய் குடும்பத்தின் வழி காட்டியாய் ஒளி விளக்காய் திகழ்ந்து மீளாத் துயரில் எங்கள் அனைவரையும் ஆழ்த்திவிட்டு அமரத்துவம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

48/1 சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### உதய சிந்தனை

சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; பலரைப் பலகாலம் ஏமாற்றலாம்; எல்லாரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது.

- பழமொழி.

37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்: தொலைபேசி: 23336

## இதய ஒலி

1-7-1985 திங்கட்கிழமை (குரோதன ஆனி 17)

# பதினெட்டில் நான்கு கழிந்து விட்டது!

பூட்டானில் நடைபெற உத்தேசிக்கப்பட்டிருக்கும் இனப் பிரச்சினை தொடர்பான சந்திப்புப் பற்றியே நேற்று முன்தினமும் இங்கு எழுத நேர்ந்தது.

இப்பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசின் பிரதிநிதிகளாகச் செல்லும் குழுவினர் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றி அன்று ஆராய்ந்தோம்.

ஆனால், இப்போது பூட்டான் மகாநாடு நடைபெறுமா என்பது சந்தேகத்திற்குரியதாகியுள்ளது.

பூட்டான் மகாநாடு தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் இலங்கை அரசாங்கம் தனிமையில் சந்திப்பதற்கென ஏற்பாடான ஒன்றல்ல.

முதற் தடவையாக தமிழீழ விடுதலைப் போராளிகளுடன் நேருக்குநேர் சந்திப்பதற்கென்றே இது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மிகவும் காத்திரமானதொன்றாக நடைபெறும் இச்சந்திப்பில் முக்கியமான முடிவு எடுக்கப்படலாமென்பதால் தமிழீழ விடுதலை இயக்கங்கள் பங்குபற்றும் வகையில் இச்சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆரம்பம் முதலே வற்புறுத்தி வந்தனர்.

பாரதத்தின் நல்லெண்ணத்தினால் விடுதலை இயக்கங்கள் இணங்கிய போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் (?) பூட்டான் சந்திப்புப் பற்றிய பேச்சு எழுந்தது.

கனவான்கள் ஒப்பந்தத்தினைப் போன்று, பூட்டானில் இலங்கை அரசின் பிரதிநிதிகளைச் சந்தித்துப்பேச ஐந்து பிரதான இயக்கங்களும் சம்மதம் தெரிவித்தபோது, அனைத்து மக்களுமே மகிழ்ச்சியடைந்தனர்.

நீண்ட காலமாக முடிவு காணப்படாது இழுபறியிலிருந்து வந்த தமிழர் பிரச்சினை இம்முறை தீர்க்கப்பட்டுவிடலாமென பலரும் நம்பியிருந்தனர்.

இம் மாதம் எட்டாம் திகதி வரலாற்றுப் பெருமைபெறும் இச் சந்திப்பு நடைபெறலாமென இரு தரப்பினரும் அறிவித்திருந்தனர்.

இவ்வேளையில் இலங்கைத் தூதுக் குழுவினரின் விபரங்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்தியபோது, முதலாவது நம்பிக்கை சற்றுத் தளர்ந்தது.

அரசாங்கக் குழு அதிகாரிகள் குழுவாக மாற்றம்கண்டபோது மகாநாடு சாத்தியமாகுமா என்ற ஐயமும் கூடவே எழுந்தது.

வாரக் கணக்கில் வழங்கப்பட்ட அவகாசத்தை வருடக் கணக்காக எண்ணி நடப்பதுபோல, முதலில் அதிகாரிகள், பின்னர் அமைச்சர்கள், அடுத்து ஆட்சிபீடத் தலைவர்கள் என்று சந்திப்புகளும், பேச்சுவார்த்தைகளும் நடத்த விரும்புவதற்கு இது உகந்த நேரமாக இருக்க முடியாது!

அரசாங்கம் பூட்டான் சந்திப்புக்கு அதிகாரிகள் குழுவைத்தான் அனுப்ப முடியுமென்றால், தமிழர் கூட்டணியும், தமிழீழ இயக்கங்களும் கூட தங்கள் கட்சிகள், அமைப்புகளின் மூன்றும் நான்காம் மட்டத்திலுள்ள தொண்டர்களைத் தெரிந்து அங்கு அனுப்பினால் என்னாகும்?

அரசாங்கத்தின் போக்கினால் மனமுடைந்த கூட்டணித் தலைவர்கள் மாநாட்டைப் பகிஷ்கரிப்பது பற்றி ஆராய்ந்துகொண்டிருந்த வேளையில் பிரதானமான நான்கு இயக்கங்களின் அறிவித்தல் வெளியாகியுள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகள் மீறி நடப்பதால், பூட்டான் சந்திப்பில் பங்குபெறுவதில்லையென விடுதலைப் புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் ஆகிய நான்கும் அறிவித்துள்ளன.

இதனால் பூட்டான் சந்திப்பு கேள்விக் குறியாகியுள்ளது.

இயக்கங்களின் குற்றச்சாட்டை அமைச்சர் லலித் அடியோடு மறுத்துள்ள அதேவேளை, ஜூன் 18-க்குப் பின் இங்கு நடந்தவை பற்றிய அறிக்கையை பாரத அரசு கோரியுள்ளது.

எல்லாமே சந்தேகத்துக்குரியதாக மாறிவரும் இவ்வேளையில், அடுத்து என்ன நடைபெறுமென்று தெரியாது மக்கள் தவிக்கின்றனர்.

பதினெட்டு வாரங்களில் நான்கு கழிந்துவிட்டது என்பதை மட்டும் நாம் நினைவூட்ட விரும்புகின்றோம்.

# வியட்நாமுக்கு தொடர்ந்து உதவ ரஷ்யா இணக்கம்!

(மாஸ்கோ)

சோவியத் யூனியன் தனது தென் கிழக்காசிய நேச நாடுகளில் முக்கியத்துவம் பெற்ற வியட்நாமுக்குத் தொடர்ந்தும் உதவ இணக்கம் தெரிவித்துள்ளது. சோவியத் யூனியன் ஜனாதிபதி திரு. கொர்பசெவ்வும் வியட்நாமிய கம்யூனிஸ்ட் தலைவர் லீயுவானும் நடத்திய சந்திப்பின்போது இந்நிலை உருவானதாகத் தெரிவிக்கப்பட்டது. சோவியத் யூனியனையே வியட்நாம் பொருளாதார ரீதியில் நம்பியிருக்கும் நிலை இருந்து வருகிறது. வியட்நாமின் உடனடித் தேவைகள் நிறைவேற்றப்படும் என சோவியத் யூனியன் அறிவித்துள்ளது.

வியட்நாம் கம்பூச்சிய ஆக்கிரமிப்பு மேற்கொண்டதையடுத்து 1979-ஆம் வருடம் ஜனவரியில் சோவியத் யூனியனின் உதவிகள் நிறுத்தப்பட்டன. கம்பூச்சிய — வியட்நாமப் போரினால் அனர்த்தங்கள் பல விளைந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 6 1/2 லட்சம் பேர் பயன் பெறுவர்

# நலிவுற்றோர் நலன்காக்க ரூ.250 கோடி செலவிட முடிவு

(சென்னை)

தமிழ்நாடு அரசாங்கம் நலிந்த பகுதி மக்களுக்கென இருநூற்று ஐம்பது கோடி ரூபாவைச் செலவிடத் தீர்மானித்துள்ளது.

இதனால் ஆறரை இலட்சம் பேர் பயனடைவர் என்று அரசாங்க வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

மேற்படித் தகவல்கள் நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் மூலம் வெளியிடப்பட்டன.

## நேருக்கு நேர் மோதல்

(புதுடில்லி)

உத்தரப் பிரதேஷில் இரு பஸ்கள் மோதிக் கொண்டதில் எழுவர் கொல்லப்பட்டனர். நாற்பது பேர் காயமடைந்தனர். இந்த பஸ்கள் நேருக்கு நேராக வந்து மோதினவாம்.

## அமெரிக்க விமானம் கடத்தல்: இழுபறி நீடிக்கிறது

# பணயக்கைதிகள் இன்னமும் லெபனானில் டமாஸ்கஸில் என்ற கூற்றுக்கு மறுப்பு

(பெய்றூட்)

கடத்தப்பட்ட அமெரிக்க விமானம் பெய்றூட்டிலேயே இன்னமும் தரித்து நிற்பதாகவும் முப்பத்தொன்பது அமெரிக்கப் பணயக்கைதிகளும் தென்லெபனானில் உள்ள பாடசாலைக் கட்டடம் ஒன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாகவும் நேற்று அறிவிக்கப்பட்டது.

டமாஸ்கஸில் பிரஸ்தாபப் பணயக்கைதிகள் வைக்கப்பட்டுள்ளனர் என்ற கூற்றை சம்பந்தப்பட்டவர்கள் மறுத்துள்ளனர்.

கடத்தல்காரர்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தாது என்றும் லெபனான் கடற்பிரதேசத்திலிருந்து போர்க்கப்பல்கள் விலக்கிக் கொள்ளப்படும் என்றும் உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும் என்று ஷிஹியாட் முஸ்லீம் படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சைக்கிளில் உலகம் சுற்றும் வாலிபர் மூவர்

(பாண்டிச்சேரி)

சைக்கிளில் உலகச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் தமது முயற்சியை கணேஷன், சீனிவாசன், பாஸ்கரன் என்ற மூன்று வாலிபர்களும் பாண்டிச்சேரியிலிருந்து ஆரம்பித்தனர். இவர்கள் அடுத்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் தாயகம் திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களது பயணத்தை அமைச்சர் திரு பி. கண்ணன் ஆரம்பித்து வைத்தார்.

# தமிழ்நாட்டில் 68 அகதிகள் முகாம்கள் எனத் தகவல்

(தஞ்சாவூர்)

தமிழ்நாடு மறுவாழ்வுத் துறை அமைச்சர் திரு. டி. இராமசாமி தமிழ்நாட்டில் இப்போது அறுபத்து எட்டு அகதிகள் முகாம்கள் இருப்பதாகத் தகவல் வெளியிட்டுள்ளார்.

இவற்றில் இருபத்து இரண்டு ஆயிரம் அகதிகள் இருப்பதாகவும் அவர் சொன்னார்.

தஞ்சாவூரில் அகதிகள் முகாம்களைப் பார்வையிட்ட அவர் அகதிகளுக்கு நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்.

## இந்திய விமான விபத்து:

# ஆழ்கடல் தேடுதல் பணியில் பிரான்ஸ், பிரிட்டிஷ் கப்பல்

(அயர்லாந்து)

அத்திலாண்டிக் கடலில் விபத்துக்குள்ளான இந்திய விமானத்தின் கறுப்புப் பெட்டியை ஆழ்கடலில் தேடும் பணியில் பிரிட்டிஷ் கடற்படைக் கப்பல் ஒன்று தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட கறுப்புப் பெட்டி ஆயிரத்து எண்ணூறு கிலோ மீட்டர் ஆழத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட ஆழத்துக்குக் கூடிய ஆழத்திலும் தேடுதல் நடத்தக் கூடியப் பிரான்ஸ் தேசத்துக் கப்பல் ஒன்றும் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சூல்ட்ஸ் ரஷ்ய அதிகாரி உரையாடல்

(ஜெனீவா)

அமெரிக்கத் துணை ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் சூல்ட்ஸ் சோவியத் யூனியன் ஆயுத பாவனைத் துறைத் தலைமை அதிகாரி திரு. விக்டா சாவோவை ஜெனீவாவில் சந்தித்து உரையாடினார்.

## சந்திப்பு

(வேர்ஜினியா)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கென்னடியின் மனைவியும் கோடீஸ்வரர் ஒனாசிஸின் மனைவியாகப் பின்னர் மாறியவருமான ஜெக்குலினுக்கும் அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி றேகனுக்கும் அவர் மனைவிக்கும் இடையே சமீபத்தில் கென்னடி குடும்ப வைபவம் ஒன்றில் சந்திப்பு இடம்பெற்றது.

## நாகேஸ்வரி நீயெனை ஆதரி

ராகம்: கானடா தாளம்: ஆதி

பல்லவி

நாகேஸ்வரி நீயெனை ஆதரி
மாகேஸ்வரி மாதவன் சோதரி

அனுபல்லவி

தியாகேசரின் திவ்யநாயகி
சாகரம் சூழும் நயினை மாதேவி (நாகேஸ்)

சரணம்

நீயே துணையென்று உனையே நம்பினேன்
நாயேனினி நாடுதல் யாரையம்மா
தாயே தயாபரி நீயல்லால்
சேயன் எனைக் காத்திடுவரர் எவரே (நாகேஸ்)

— டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்
(நயினை நாகபூஷணி அம்பாள் தேர் இன்று)

# ஈழமுரசு

விமான டிக்கட்டுகளை மலிவாகப் பெறுவதற்கு
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி
பிரான்ஸ் செல்வதற்கு சகல பிரயாண
ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்
யாழ்நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்
ரான்ஸ் யூரோ ரவல்ஸ்
தொடர்பு: S. K. மகேந்திரராஜா
இல 6, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23831

ரோட்டரி வைபவத்தில் பேச்சு

# இலங்கை இனப்பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்த்துவைக்க முடியாது என்கிறார் தூதர் டிக்ஸிற்

(கொழும்பு)

“இந்தப் பிராந்தியத்தில் உள்ள பிரச்சினைகளை ராணுவ ரீதியில் தீர்த்துவைக்க முடியாது என்பதை இலங்கை ஜனாதிபதியும், பாரதப் பிரதம மந்திரியும் தமது சந்திப்பில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்'' என்று இலங்கைக்கான பாரதத் தூதுவர் திரு. டிக்ஸிற் தெரிவித்துள்ளார்.

“பாரதம் இலங்கையுடன் நெருங்கிய நல்லுறவை வைத்திருக்க விரும்புகிறது'' என்றும் கொழும்பில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ரோட்டரிக் கழகக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் சொன்னார்.

“கடந்த ஓரிரு வருடங்களாக இலங்கை- பாரத நல்லுறவில் சில தாக்கங்கள் ஏற்பட்டிருந்தன. முன்னாள் பாரதப் பிரதம மந்திரி காலஞ்சென்ற ஜவகர்லால் நேரு சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர், சுதந்திரமான இலங்கை கடந்த பல்லாண்டுகளாக பாரதத்துடன் மிக நெருக்கமான நல்லுறவை கொண்டிருக்கிறது என்று கூறியிருந்தார். அதுபோன்றே இந்த இரு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவு வலுப்பெற்று வருகின்றது'' என்று திரு. டிக்ஸிற் கூறினார்.

“பாரதத்துடன் இலங்கை மக்கள் நட்புறவு பாராட்டி வருவதை என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது'' என்று கூறிய அவர், அரசாங்க மட்டத்தில் பல விடயங்களை நாம் விவாதிக்கின்ற போதிலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு, சிறப்பாகவே இருந்து வருகிறது'' என்று சொன்னார்.

“இலங்கைக்கும், பாரதத்துக்கும் இடையில் சில சந்தர்ப்பங்களில் பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றுக்கு வெகு இலகுவில் பரிகாரம் காணக்கூடியதாக இருக்கும். இரு நாடுகளுக்கும் இடையே எந்த விதக் கசப்புணர்வோ, கருத்து மோதல்களோ இருப்பதாக என்னால் சிந்திக்கக்கூட முடியாது” என்றும் சொன்னார் அவர்,

## ஜப்பானின் உதவியுடன் இலங்கையில் ஆயுத கூடமும், உடற்பயிற்சி மண்டபமும்

ஜப்பானிய அரசாங்கம் இலங்கையில் தேசிய இளைஞர் நிலையம் ஒன்றை நிறுவுவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளது. மகரகமையில் அமைக்கப்படவிருக்கும் இந்த நிலையம், இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் ஜப்பானால் அனுப்பப்பட்ட ஏழு அங்கத்தவர் கொண்ட நிபுணர் குழுவின் ஆய்வின் சிபாரிசில் உருவாக்கப்படவுள்ளது.

இவர்களது ஆய்வின் சிபாரிசினது அடிப்படையிலேயே ஜப்பானிய அரசு இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்க முன்வந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கான ஒப்பந்தங்களும் அண்மையில் செய்யப்பட்டன.

இவ் ஒப்பந்தப் பத்திரங்களில் இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஜே. பி. ரதிவத்தையும் ஜப்பானிய ஆயுதக் குழுத் தலைவர் எஸ். என் டோவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி நெறிகளை நடத்துவதற்கும், செயல் முறைகளுக்கான ஆயுத கூடம், விரிவுரை அறைகள், உடற்பயிற்சி மண்டபம், விடுதி மற்றும் பொருட்காட்சி மண்டபம் ஆகியவற்றைக் கொண்ட அமைப்புகள் முக்கிய இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இன்று

## நூலக பகுதி திறப்பு விழா

(அரியாலை)

அரியாலை சன சமூக நிலைய நூலக இரவல் கொடுக்கும் பகுதி இன்று 1-7-85 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாநகர விசேட ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும். சிறப்பு விருந்தினர்களாக மில்க்வைற் அதிபர் க. கனகராசா, அதிபர் கே. சொக்கலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

### மாநாடு 10ம்....

— 1ஆம்பக்கத் தொடர்

பிரதான இயக்கங்கள் குற்றம் சாட்டி பூட்டான் மாநாட்டில் பங்குபற்றப் போவதில்லை என அறிவித்திருந்த போதிலும் அவர்களை எவ்வாறாயினும் மாநாட்டில் பங்குபற்ற வைப்பதற்கு பாரத அரசு முழு முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது,

கூட்டணியினர் இம்மாதம் 6 ஆம் திகதி புதுடில்லிக்கு செல்வதற்கு முன்னர், தீவிரவாத இயக்கத் தலைவர்களைச் சந்தித்து இது விடயமாக நல்ல முடிவைக் காணுவிட்டால் மத்திய அரசு முக்கியமான தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களை டில்லிக்கு அழைத்து இவ்விடயத்தில் இணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கலாம் எனவும் சென்னையில் இருந்து வந்துள்ள பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

### தலைகீழாகக்.

வெட்டுவானில் வசிப்பவருமான இவர், இரண்டு புல்டோசரில் தீவிரவாதிகள் பலர் வந்துள்ளதாகவும், கொக்காவில் முகாம் தாக்குதல் பற்றியும் இராணுவத்திற்கு தகவல் கொடுத்தார் எனவும் சிகரட் சாராயம் போன்ற பொருட்கள் வாங்கிக் கொடுக்கும் இவர் ஒரு சலவைத் தொழிலாளி என்றும் அதில் எழுதப்பட்டு இருந்தது. இவர் பெயர் செல்லையா ஆறுமுகம் (55) ஆகும்.

இக்கம்பத்தில் ஏற்கனவே மூவருக்கு அண்மையில் தண்டனை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### இந்தியாவுக்கு....

மறு புதுடில்லி வந்து சேர்ந்தன. இந்திய பாதுகாப்பு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் நேற்று இவற்றைக் கையேற்றார்.

இந்த விமானங்கள் எதிரிகளின் போர் விமானங்களை நாசம் செய்யும் வல்லமையுடையவை.

### ராஜாங்க அமைச்சு....

இடத்தில் இருந்து பத்துப்பேர் கடத்திச் செல்லப்பட்டு அவர்களில் ஒன்பது பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 27-ஆம்திகதி யாழ்ப்பாணத்தில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டு அதற்கு தமிழீழ இராணுவம் உரிமை கோரியதாகவும், மட்டக்களப்பில் ஒரு ஆணும் பெண்ணும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதற்கு 'புளொட்' இயக்கம் உரிமை கோரியுள்ளது.

முல்லைத்தீவு நெற்களஞ்சிய சாலையில் இருந்து 37, 500 ரூபா பெறுமதியான நெல் மூடைகள் திருடப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

## அகதிகளுக்கு மேலும் 500 வீடுகள் அமைக்கத் திட்டம்

(சென்னை)

இலங்கை அகதிகளுக்கென மேலும் ஐநூறு வீடுகளைக் கட்டத் தமிழ்நாடு அரசாங்கம் அனுமதித்துள்ளது.

இத் தகவலை அரசாங்க அதிகாரி ஒருவர் வெளியிட்டார். அகதிகளின் பிள்ளைகளுக்கு உயர்நிலைப் பாடசாலை ஒன்று நிறுவவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

இதுவரை அகதிகளுக்கு மூன்று கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தேசிய ரீதியில் இலங்கையில் ஆயுதப்படை அமைக்கப்படும்

தீவிரவாதிகள் தாம் தோல்வியடைவதை தவிர்க்க முடியாது என்பதை இன்று உணர்ந்துள்ளதால் அவர்களின் போக்கில் திருப்பம் ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டில் எல்லோரும் மகிழ்ச்சியாக உள்ளனர்!

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி குருநாகலில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அரசாங்கம் தேசிய ரீதியில் ஒரு ஆயுதப்படையை ஏற்படுத்தத் தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் சொன்னார்.

### வன்முறைகள்....

— 1ஆம் பக்கத் தொடர்

வார்த்தைகளை நடத்துவதற்கு இது தக்க தருணம்'' என்று சொன்னார்.

“பயங்கரவாத நடவடிக்கைகள் குறைந்திருப்பது மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இடமளிக்கிறது எவரும் குறுகிய அரசியல் ஆலாபம் சட்ட முற்படக் கூடாது. எனினும் பிரச்சினைக்குத் தீர்வு காண சிறிது காலம் அவசியமாகும். சமாதானம், நீதியை நிலைபெறச் செய்யும் வரை மக்கள் அமைதியாக இருக்கவேண்டும். ஜனாதிபதி ஜெயவர்த்தனா பாரத அரசுடன் இரு சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். நான் நான்கு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டேன்'' என்றும் அமைச்சர் சொன்னார்.

“இது இலங்கையின் பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கும் பாரத அரசுக்குச் சந்தர்ப்பம் அளித்தது. இலங்கையில் உள்ள சகல சமூகத்தவரும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயத்தைப் பாரத அரசு இப்போது கொண்டுள்ளது.'' என்றும அவர் சொன்னார்.

## பொலிகண்டி உற்சவம்

(உடுப்பிட்டி)

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய ஆலயம், வல்வெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயங்களின் வருடாந்த தேர்த்திருவிழா இன்றும் தீர்த்தோற்சவம் நாளையும் நடைபெறுகின்றன.

### இக்கட்டான காலத்....

— 1ஆம் பக்கத் தொடர்

துணைவேந்தர் மேலும் உரையாற்றுகையில், 1983 ஜுலைக் கலவரத்தை அடுத்து யாழ்ப்பாணம் வந்த தமிழ் மாணவர்களுக்கு உடனடியாக அனுமதி வழங்கி, தமிழ் மாணவர்கள் எவ்வகையிலும் பாதிப்படையக் கூடாது என்ற இலட்சியத்துடன் தொண்டாற்றிய ஆனந்தராஜனின் மறைவினால் யாழ். பல்கலைக்கழகமும் நல்ல தொரு ஆலோசகரை இழந்து விட்டது என்றார்.

கல்லூரி மாணவர், ஆசிரியர் சார்பில் உப அதிபர் திரு ரி. குணசீலன் பேசுகையில், திரு. ஆனந்தராஜனின் நற்பணிகளையும், சேவை மனப்பான்மையையும் சமயத் தொண்டுகளையும், கல்வித் தொண்டுகளையும் விளக்கினார்.

கல்லூரி நலன்புரிச் சங்கத்தின் சார்பில் திரு எம். கனகரத்தினமும், பழைய மாணவர் சார்பில் திரு. எஸ். எம். வி. திஸநாயகமும், பாடசாலை அதிபர்கள் சார்பில் சென். பற்றிக்ஸ் அதிபர் வண. பிதா. பிரான்சிஸ் ஜோசப்பும் ஆனந்தராஜனின் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினர்.

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ மா. வைத்தியநாதக் குருக்கள்

புத்தூர் காரைக்கூடல் வைரவர் கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ மா. வைத்தியநாதக் குருக்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் யோகாம்பாள், சுந்தராம்பாள், ஞானசுந்தர சர்மா (ஆசிரியர் விடத்தல் தீவு றோ. க. பாடசாலை), சிவசுந்தரசர்மா (இலண்டன்) ஆகியோரின் தகப்பனாரும் முத்துக்குமார சாமிக்குருக்கள் (உரும்பிராய் கற்பக பிள்ளையார் கோவில்) சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் (முருகன் கோவில், லண்டன்) சகுந்தலா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (1-7-85 திங்கள்) பகல் பன்னிரண்டு மணியளவில் புத்தூரில் நடைபெறும்.

தகவல் : ஞானசுந்தர சர்மா, புத்தூர்

## அறிவித்தல்

சுழிபுரத்திலிருந்து கல்வியங்காட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வரும் போது மூன்று செக் (cheque)கும், பணமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

நாகம் இண்டஸ்றீஸ்
சேர்ச் லேன்
கல்வியங்காடு.

“ஈழமுரசு” சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 1-7-85 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.